# பத்திரிக்கைச் செய்தி

பொது விநியோகத் திட்டத்தில் காணப்படும் குறைபாடுகளை களைவதற்கும் மக்களின் குறைகளைக் கேட்டு உடனுக்குடன் அவற்றை நிவர்த்தி செய்யவும் மாவட்டம் தோறும் குறிப்பிட்ட நாளில் உணவுப் பொருள் வழங்கல் சம்பந்தமான பொதுமக்கள் குறை கேட்கும் கூட்டம் (Civil Supplies Grievances Meeting) மற்றும் நுகர்வோர் விழிப்புணர்வு முகாமும் ஒவ்வொரு மாதமும் 2-வது சனிக்கிழமையில் நடத்தப்படுகிறது.

தேனி ளமாவட்டத்தில் செப்டம்பர் 2017-ஆம் மாதத்தில் பொது விநியோகத்திட்டம் மக்கள் குறைதீர் கூட்டம் நடத்திட தேர்வு செய்யப்பட்டுள்ள கிராமங்கள் மற்றும் நியமிக்கப்பட்டுள்ள பார்வையாளர், அலுவலர்கள் ஆகிய விபரம் பின்வருமாறு

| வ.எண் | வட்டம் | கூட்டம் நடக்கும் இடம் | கூட்ட நாள் & நேரம் | பார்வையாளராக நியமனம் செய்யப்படும் அலுவலர் |
|---|---|---|---|---|
| 1 | தேனி | ஸ்ரீரங்காபுரம் | 09.09.2017 காலை 10.00 மணி | 1. திரு. சிவ.முத்துக்குமாரசாமி கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர், தேனி. |
| 2 | பெரியகுளம் | வடபுதுப்பட்டி | 09.09.2017 காலை 10.00 மணி | 2. திருமதி.ரா.ஆனந்தி வருவாய் கோட்டாட்சியர் பெரியகுளம |
| 3 | ஆண்டிபட்டி | கதிர்நரசிங்காபும் | 09.09.2017 காலை 10.00 மணி | 3. திருமதி.ந.ரசிகலா மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் தேனி. |
| 4 | உத்தம பாளையம் | மேலக் கூடலூர் | 09.09.2017 காலை 10.00 மணி | 4. திரு.மு.கார்த்திகேயன் வருவாய் கோட்டாட்சியர் உத்தமபாளையம். |
| 5 | போடிநாயக்கனூர் | முந்தல் | 09.09.2017 காலை 10.00 மணி | 5. திரு.கே.ராஜா, மண்டல மேலாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தேனி. |

இக்குறை கேட்கும் கூட்டத்தில் பொதுமக்கள் பொது விநியோக கடைகள் சம்பந்தமான குறைபாடுகள் மற்றும் குடும்ப அட்டைகள் பெறுவதில் உள்ள சிரமங்கள் குறித்தும், குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கல், பெயர் நீக்கம், முகவரி மாற்றம் மற்றும் கடை மாற்றம் குறித்தும் மனு செய்யலாம். தேர்வு செய்யப்பட்டுள்ள ஊராட்சி / பேரூராட்சி அலுவலகத்தில் அந்த உள்ளாட்சி பகுதிகளில் உள்ள நியாய விலைக் கடைகள் சம்பந்தமாக குறை தீர்க்கும் கூட்டம் நடத்தப்படும்.

இக்கூட்டத்தில் பொது மக்கள் குறிப்பாக குடும்ப அட்டைதாரர்கள் அந்தந்த பகுதிகளில் செயல்படும் நியாயவிலைக் கடைகளின் செயல்பாடுகள் மற்றும் குடும்ப அட்டை வழங்குதலில் உள்ள இடர்பாடுகள் குறித்து எடுத்துக்கூற வாய்ப்பு அளிக்கப்படும்.

பொது மக்கள் தங்கள் குறைகளை முன்கூட்டியே சம்பந்தப்பட்ட வட்ட வழங்கல் அலுவலர், கூட்டுறவு சார்பதிவாளர் மற்றும் நியாய விலை கடை நடத்தும் நிறுவன அலுவலர்களுக்கு மனு மூலம் தெரிவிக்கலாம்.

முன்கூட்டி பெறப்படும் புகார்கள் மற்றும் குறைபாடுகள் வகைபாடு வாரியாக பிரிக்கப்பட்டு உடனுக்குடன் அவை தீர்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு கூட்ட நாள் அன்று பொது மக்களுக்கு நடவடிக்கை விவரம் தெரிவிக்கப்படும். மேலும் கூட்ட நாள் அன்று பெறப்படும் புகார்கள், குறைபாடுகள் மீது 30 தினங்களுக்குள் நடவடிக்கை மேற்கொண்டு பதில் தரப்படும்.

பொதுமக்கள் குறை கேட்கும் கூட்டத்தில், சம்பந்தப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள், பொது விநியோகக் கடைகளின் செயல்பாடுகள் மற்றும் குடும்ப அட்டைகள் பெறுதலில் உள்ள குறைபாடுகளைத் தெரிவித்து அதற்குரிய தீர்வினைப் பெற்றுக் கொள்ளலாம். மேலும் சம்பந்தப்பட்ட நியாய விலைக்கடை தொடர்பான சமூக தணிக்கை மற்றும் நுகர்வோர் விழிப்புணர்வு முகாமும் நடைபெறவுள்ளது. எனவே பொதுமக்களும், மாணவ, மாணவியர்களும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், நுகர்வோர் நடவடிக்கை குழுக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஆகியோர் இம்முகாமில் கலந்து கொண்டு பயனடையுமாறு தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ந.வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,

தேனி.